www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



வகுப்பு : 10

தேர்வு எண் 0 1 0 2 1 A

# முதல் திருப்புதல் தேர்வு, ஜனவரி – 2025

நேரம் : 3.00 மணி]

## தமிழ்

[மொத்த மதிப்பெண்கள் : 100

பகுதி – I (மதிப்பெண்கள்:15)

I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 15X1=15

1. மேன்மை தரும் அறம் என்பது -----
   அ) கைமாறு கருதாமல் அறம் செய்வது
   ஆ) மறுபிறப்பில் பயன் பெறலாம் என்ற நோக்கில் அறம் செய்வது
   இ) புகழ் கருதி அறம் செய்வது
   ஈ) பதிலுதவி பெறுவதற்கா அறம் செய்வது
2. 'பெரியமீசை சிரித்தார்' அடிக்கோடிட்ட தொடருக்கான தொகையின் வகை -----
   அ) பண்புத்தொகை ஆ) உவமைத்தொகை இ) அன்மொழித்தொகை ஈ) உம்மைத்தொகை
3. மலர்கள் தரையில் நழுவும். எப்போது?
   அ) அள்ளி முகர்ந்தால் ஆ) தளரப் பிணைத்தால் இ) இறுக்கி முடிச்சிட்டால் ஈ) காம்பு முறிந்தால்
4. மரபுத்தொடருக்கான பொருளைத் தேர்க. கண்ணும் கருத்தும் ------
   அ) வேகப்படுத்துதல் ஆ) கற்பனை செய்தல்
   இ) சிரத்தையோடு செய்தல் ஈ) ஆற்றில் இறங்குதல்
5. பரிபாடல் அடியில் 'விசும்பும் இசையும்' என்னும் தொடர் குறிப்பது ------
   அ) வானத்தையும் பாட்டையும் ஆ) வானத்தையும் புகழையும்
   இ) வானத்தையும் பூமியையும் ஈ) வானத்தையும் பேரொலியையும்
6. குளிர் காலத்தைப் பொழுதாகக் கொண்ட நிலங்கள் -------
   அ) முல்லை, குறிஞ்சி, மருத நிலங்கள் ஆ) குறிஞ்சி, பாலை, நெய்தல் நிலங்கள்
   இ) குறிஞ்சி, மருத, நெய்தல் நிலங்கள் ஈ) மருதம், நெய்தல், பாலை நிலங்கள்
7. பின்வருவனவற்றுள் முறையான தொடர் ------
   அ) தமிழர் பண்பாட்டில் தனித்த வாழை இலைக்கு இடமுண்டு
   ஆ) தமிழர் வாழை இலைக்குப் பண்பாட்டில் தனித்த இடமுண்டு
   இ) தமிழர் பண்பாட்டில் வாழை இலைக்குத் தனித்த இடமுண்டு
   ஈ) தமிழர் வாழை பண்பாட்டில் தனித்த இல்லைக்கு இடமுண்டு
8. சுதந்திர இந்தியாவின் மகத்தான சாதனையும் சவாலுமாக ஜெயகாந்தன் கருதுவது
   அ) அரசின் நலத்திட்டங்களைச் செயல்படுத்தல் ஆ) பெற்ற சுதந்திரத்தைப் பேணிக்காத்தல்
   இ) அறிவியல் முன்னேற்றம் ஈ) வெளிநாட்டு முதலீடுகள்
9. எய்துவர் எய்தாப் பழி – இக்குறளடிக்குப் பொருந்தும் வாய்பாடு -------
   அ) கூவிளம் தேமா மலர் ஆ) கூவிளம் புளிமா நாள்
   இ) தேமா புளிமா காசு ஈ) புளிமா தேமா பிறப்பு
10. பொருந்தும் விடை வரிசையைத் தேர்ந்தெடுக்க.
    அ) கொண்டல் – 1. மேற்கு
    ஆ) கோடை – 2. தெற்கு
    இ) வாடை – 3. கிழக்கு
    ஈ) தென்றல் – 4. வடக்கு
    அ) 1,2,3,4 ஆ) 3,1,4,2 இ) 4,3,2,1 ஈ) 3,4,1,2
11. ஊர்ப்பெயர்களின் மரூஉக்களில் பொருத்தானதைத் தேர்க.
    அ) புதுக்கோட்டை – புதுவை ஆ) புதுச்சேரி – புதுகை
    இ) திருநெல்வேலி – திருச்சி ஈ) கோயம்புத்தூர் – கோவை
    ஈ) கோட்டையை முற்றுகையிடல்

பாடலைப் படித்து வினாக்களுக்கு (12,13,14,15) விடையளிக்க.

"முத்தமிழ் துய்ப்பதால் முச்சங்கம் கண்டதால்
மெத்த வணிகலமும் மேவலால் – நித்தம்
அணைகிடந்தே சங்கத் தவர்காக்க ஆழிக்கு
இணைகிடந்த தேதமிழ் ஈண்டு"

12. பாடல் இடம்பெற்ற நூல் ---- ?
    அ) நற்றிணை ஆ) முல்லைப்பாட்டு
    இ) குறுந்தொகை ஈ) தனிப்பாடல் திரட்டு
13. பாடலில் இடம்பெற்றுள்ள அணி -------
    அ) இரட்டுற மொழிதல் அணி ஆ) தீவக அணி
    இ) வஞ்சப் புகழ்ச்சி அணி ஈ) நிரல் நிறை அணி

Scanned with CamScanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

14. தமிழுக்கு இணையாகப் பாடலில் ஒத்திருப்பது ------
அ) சங்கப்பலகை ஆ) கடல் இ) அணிகலன் ஈ) புலவர்கள்

15. பாடலின் ஆசிரியர் -------
அ) பாவலரேறு பெருஞ்சித்திரனார் ஆ) நப்பூதனார்
இ) சந்தக்கவிமணி தமிழழகனார் ஈ) பெருங்கௌசிகனார்

## பகுதி – II (மதிப்பெண்கள்:18) பிரிவு – 1

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். வினா எண் 21–க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.** 4X2=8

16. பாசவர், வாசவர், பல்நிண விலைஞர், உமணர் – சிலப்பதிகாரம் காட்டும் இவ்வணிகர்கள் யாவர்?

17. விடைகளுக்கேற்ற வினாக்கள் எழுதுக.
அ) ஒருநாட்டு வளத்திற்குத் தக்கபடியே, அந்நாட்டு மக்களின் அறிவொழுக்கங்களும் அமைந்திருக்கும்.
ஆ) சொல்லாராய்ச்சியில் பாவாணரும் வியந்த பெருமகனார் தமிழ்த்திரு. இரா.இளங்குமரனார்

18. மருத்துவத்தில் மருந்துடன் அன்பும் நம்பிக்கையும் ஆற்றும் பாங்கினை எழுதுக.

19. பிறர் நன்மை கருதித் தமக்கு நஞ்சைக் கொடுத்தாலும் உண்ணும் மரபினர் என்று திருவள்ளுவர் யாரைக் குறிப்பிடுகிறார்?

20. 'தானியம் ஏதும் இல்லாத நிலையில் விதைக்காக வைத்திருந்த தினையை உரலில் இட்டுக் குற்றியெடுத்து விருந்தினருக்கு விருந்தளித்தாள் தலைவி' என்பது இலக்கியச் செய்தி, விருந்தோம்பலுக்குச் செல்வம் மட்டுமே இன்றியமையாத ஒன்றா? உங்கள் கருத்தை எழுதுக.

21. 'வினை' எனத் முடியும் திருக்குறளை எழுதுக.

## பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** 5X2=10

22. தண்ணீர்குடி, தயிர்க்குடம் ஆகிய தொகைச்சொற்களை விரித்து எழுதி, தொடர்களில் அமைக்க.

23. கலைச்சொல் தருக.
அ) Aesthetics ஆ) Myth

**குறிப்பு: செவிமாற்றுத் திறனாளர்களுக்கான மாற்று வினா**
பொருத்தமானவற்றைச் சொற்பெட்டியில் கண்டு எழுதுக.

| கவிழும், அவிழும், தயங்கும், தங்கும் |
|---|

காலை ஒளியினில் மலரிதழ் ..................
சோலைக் பூவினில் வண்டினம்.............
மலைமுகட்டில் மேகம் ................
அதைப் பார்க்கும் மனங்கள் செல்லத் .............

24. அமர்ந்தான் – பகுபத உறுப்பிலக்கணம் தருக.

25. இரு சொற்களையும் ஒரே தொடரில் அமைத்து எழுதுக.
அ) சிலை, சீலை ஆ) விடு, வீடு

26. உடுப்பதூஉம் உண்பதூஉம் காணின் பிறர்மேல்
வடுக்காண் வற்றாகும் கீழ் – இக்குறளின் அமைந்துள்ள அளபெடையின் வகையைச் சுட்டி, அதன் இலக்கணம் தருக.

27. தொகைச் சொற்களைப் பிரித்து எழுதி, தமிழ் எண்ணுரு தருக.
முப்பாலை முழுமையாகத் தந்த தமிழின் சிறப்பினை ஐந்திணைகளில் அழகுற விளக்குபவை சங்க இலக்கியங்கள்

28. தொடர்களில் உள்ள எழுவாயைச் செழுமை செய்க.
அ) மரத்தை வளர்ப்பது நன்மை பயக்கும்
ஆ) வாழ்க்கைப் பயணமே வேறுபட்ட பாடங்களைக் கற்றுத் தருகிறது.

## பகுதி – III (மதிப்பெண்கள்:18) பிரிவு – 1

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும்.** 2X3=6

29. உயிராக நான், பல பெயர்களில் நான், நான்கு திசையிலும் நான், இலக்கியத்தில் நான், முந்நீர் நாவாய் ஓட்டியாக நான்.... முதலிய தலைப்புகளில் காற்று தன்னைப் பற்றி பேசுகிறது. இவ்வாறு 'நீர்' தன்னைப்பற்றி பேசினால் ......... உங்களுடைய கற்பனையில் ஆறு தலைப்புகளை எழுதுக.

30. சங்க இலக்கியங்கள் காட்டும் அறங்கள் இன்றைக்கும் தேவையானவையே என்பதற்குச் சில எடுத்துக்காட்டுகள் தருக.

31. உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.
ஒரு மொழியில் உணர்த்தப்பட்டதை வேறொரு மொழியில் வெளியிடுவது மொழிபெயர்ப்பு. மொழிபெயர்ப்பைக் கல்வியாக ஆக்குவதன் மூலம் அனைத்துலக அறிவையும் நாம் எளிதாகப் பெறமுடியும். மொழிபெயர்ப்பு வழியாகப் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் பல்கலைக்கழகங்களிலும் பிறமொழிகளைக் கற்கும் வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன.

Scanned with CamScanner

பிறமொழி இலக்கியங்களை அறிந்துகொள் மொழிபெயர்ப்பு மிகவும் உதவுகின்றது. தமிழுக்குரிய நூலாக இருந்த திருக்குறள் உலக மொழிக்குரியதாக மாறியது மொழிபெயர்ப்பால் தான். இன்று பல்வேறு துறைகளின் வளர்ச்சிக்கு மொழிபெயர்ப்பே அதிகம் தேவைப்படுகின்றது.

**வினாக்கள்:**

அ) திருக்குறள் உலகமொழிக்குரியதாக மாறியது எவ்வாறு?

ஆ) மொழிபெயர்ப்புக் கல்வியின் வழியாக எதனை எளிதாகப் பெறமுடியும்?

இ) பத்திக்குப் பொருத்தமான தலைப்பு ஒன்று எழுதுக.

## பிரிவு – 2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும். வினா எண் 34–க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.** **2X3=6**

32. உங்களுடன் பயிலும் மாணவர் ஒருவர் பள்ளிப்படிப்பைப் பாதியில் நிறுத்தி வேலைக்குச் செல்ல விரும்புகிறார். அவரிடம் கல்வி கற்பதன் இன்றியமையாமையை எவ்வகையில் எடுத்துரைப்பீர்கள் என்பதை எழுதுக?

33. வாளித் தண்ணீர், சாயக் குவளை, கந்தைத் துணி, கட்டைத் தூரிகை – இச்சொற்களைத் தொடர்புபடுத்தி ஒரு பத்தி அமைக்க.

34. அடிபிறழாமல் எழுதுக.

அ) ‘வாளால் அறுத்துச் சுடினும்’ எனத் தொடங்கும் பெருமாள் திருமொழி பாடல். **(அல்லது)**

ஆ) ‘தூசும் துகிரும்’ எனத்தொடங்கும் சிலப்பதிகாரப் பாடல்.

## பிரிவு – 3

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும்.** **2X3=6**

35. முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும் – இக்குறட்பாவில் அமைந்துள்ள பொருள்கோளின் வகையைச் சுட்டி விளக்குக.

36. தன்மையணியை விளக்கி எழுதுக.

37. கொடுப்பதூஉம் துய்ப்பதூஉம் இல்லார்க் கடுக்கிய
கோடிஉண் டாயினும் இல் – திருக்குறளை அலகிட்டு வாய்பாடு காண்க.

## பகுதி – IV (மதிப்பெண்கள்:25)

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி.** **5X5=25**

38. அ) சந்தக் கவிதையில் சிறக்கும் கம்பன் என்ற தலைப்பில் இலக்கிய உரை எழுதுக.

அன்பும் பண்பும் கொண்ட தலைவர் அவர்களே தேர்ந்தெடுத்த பூக்களைப் போன்று வரிசை தொடுத்து அமர்ந்திருக்கும் ஆன்றோர்களே! அறிஞர் பெருமக்களே! வணக்கம். இயற்கை கொலு வீற்றிருக்கும் காட்சியைப் பெரிய கலைநிகழ்வே நடப்பதான தோற்றமாக் கம்பன் காட்டும் கவி.... தண்டலை மயில்கள் ஆட....இவ்வுரையைத் தொடர்க. **(அல்லது)**

ஆ) இறைவன் புலவர் இடைக்காடன் குரலுக்குச் செவி சாய்ந்த நிகழ்வை நயத்துடன் எழுதுக.

39. அ) ஓட்டுநர் உரிமம் பெற்றுள்ள நண்பருக்கு, முக்கியச் சாலை விதிகளைக் குறிப்பிட்டு, அவற்றைக் கடைப்பிடிக்க வலியுறுத்திக் கடிதம் ஒன்று எழுதுக. **(அல்லது)**

ஆ) நாளிதழ் ஒன்றின் பொங்கல் மலரின் உழவுத்தொழிலுக்கு வந்தனை செய்வோம் என்ற உங்கள் குறுங்கட்டுரையை வெளியிட வேண்டி, அந்நாளிதழ் ஆசிரியருக்குக் கடிதம் எழுதுக.

40. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



Scanned with CamScanner

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



41. விழுப்புரம் மாவட்டம், பெரியார் நகர், கம்பன் தெரு, 52 ஆம் இலக்க வீட்டில் குடியிருக்கும் குமரனின் மகள் புகழினி மாவட்ட மைய நூலகத்தில் நூலக உறுப்பினராகச் சேர விரும்புகிறார். தேர்வர் தன்னை புகழினியாக எண்ணி, கொடுக்கப்பட்ட நூலக உறுப்பினர் படிவத்தை நிரப்புக.

42. அ) பள்ளியில் நான், வீட்டில் நான் – என்னும் தலைப்புகளில் நீங்கள், பள்ளியிலும் வீட்டிலும் நடந்துகொள்ளும் முறைகள் ஐந்தினைப் பட்டியலிடுக. (அல்லது)

ஆ) மொழிபெயர்க்க.

Malar: Devi, switch off the lights when you leave the room

Devi: Yeah. We have to save electricity.

Malar: Our nation spends a lot of electricity for lighting up our streets in the night.

Devi: Who knows? In future our country may launch artificial moons to light our night time sky!

Malar: I have read some other countries are going to launch these types of illumination satellites near future.

Devi: Superb news! If we launch artificial moons, they can assist in disaster relief by beaming light on areas that lost power.

குறிப்பு : செவி மாற்றுத் திறனாளர்களுக்கான மாற்றுவினா.

உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

மொழிபெயர்ப்பினால் புதிய சொற்கள் உருவாகி மொழிவளம் ஏற்படுகிறது. பிற இனத்தவரின் பண்பாடு, நாகரிகம், பழக்கவழக்கம் போன்றவற்றை அறியமுடிகிறது. அதிலிருந்து நல்லனவற்றை நாம் பெற்றுக்கொள்ள முடிகிறது. பிறமொழி இலக்கிய அறிவு கிடைக்கிறது. அதன் மூலம் நம் இலக்கியத்தை வளப்படுத்த முடிகிறது. உலகப்புகழ் பெற்ற அறிவியல் கண்டுபிடிப்புகளையும் இலக்கியப் படைப்புகளையும் அறிவதற்கு வாய்ப்பு ஏற்படுகிறது. கருத்துப் பகிர்வைத் தருவதால் மொழிப்பெயர்ப்பைப் பயன்கலை என்று குறிப்பிடுவார்கள். மொழிப்பெயர்ப்பு மூலம் ஒரு நாட்டின் வரலாற்றிலும் இலக்கயத்திலும் பண்பாட்டிலும் வலிமையான தாக்கத்தை ஏற்படுத்த முடியும்.

வினாக்கள்:

i) மொழிபெயர்ப்பின் பயன் யாது?

ii) மொழிபெயர்ப்பைப் பயன்கலை என்று குறிப்பிடுவதன் காரணம் யாது?

iii) மொழிபெயர்ப்பு ஏற்படுத்தும் முக்கியத் தாக்கத்தைக் குறிப்பிடுக.

iv) பிற இனத்தவரின் பண்பாடு, நாகரிகம்இ பழக்கவழக்கம் போன்றவற்றை எதன்மூலம் அறியலாம்?

v) இலக்கியத்தை எவ்வாறு வளப்படுத்தலாம்?

## பகுதி – V

அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடையளிக்கவும். 3X8=24

43. அ) தமிழின் சொல்வளம் பற்றியும் புதிய சொல்லாக்கத்திற்கான தேவை குறித்தும் தமிழ் மன்றத்தில் பேசுவதற்கான உரைக்குறிப்புகளை விரிவாக எழுதுக. (அல்லது)

ஆ) நிகழ்கலை வடிவங்கள் – அவை நிகழும் இடங்கள் – அவற்றின் ஒப்பனைகள் – சிறப்பும் பழைமையும் – இத்தகைய மக்கள் கலைகள் அருகிவருதற்கான காரணங்கள் – அவற்றை வளர்த்தெடுக்க நாம் செய்யவேண்டுவன – இவை குறித்து நாளிதழுக்கான தலையங்கம் எழுதுக.

44. அ) அன்னமய்யா என்னும் பெயருக்கும் அவரின் செயலுக்கும் உள்ள பொருத்தப்பாட்டினைக் கோபல்லபுரத்து மக்கள் கதைப்பகுதி கொண்டு விவரிக்க. (அல்லது)

ஆ) ‘என் மக்கள் அனைவர்க்கும் நலம் கிட்டும், எல்லாரும் நலமுடன் வாழ்வார்கள்’ என்ற இராமானுசரின் கூற்றுக்கு ஏற்ப தன்னலமற்ற பண்புகளைக் கொண்டவர் இராமானுஜர் என்பதை நாடகம் வழி விளக்குக.

45. அ) குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதி, தலைப்பு ஒன்று தருக.

முன்னுரை – சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் – வேளாண் தொழில் தமிழர் வாழ்வின் ஒரு கூறு – பொன்னேர் பூட்டுதல் தமிழர் பண்பாட்டின் மகுடம் – உழவே உயர்வுக்கு வழி – முடிவுரை. (அல்லது)

ஆ) குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதித் தலைப்பு ஒன்று தருக.

முன்னுரை – தமிழகம் தந்த தவப்புதல்வர் – நாட்டுப் பற்று – மொழிப்பற்று – பொதுவாழ்வில் தூய்மை – எளிமை – மக்கள் பணியே மகத்தான பணி – முடிவுரை.

Scanned with CamScanner

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net